தமிழ்ச்சோலை - பிரான்சு
Tamoulcholai-France

# திருக்குறள் திறன் போட்டி 2026

## வள்ளுவர் ஆண்டு - 2057



நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்

## தமிழ்ச்சோலை மட்டப் போட்டி நெறிமுறைகள்

தமிழ்ச்சோலைப் பள்ளிமட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் அனைத்துப் பிரிவுகளின் போட்டியாளர்களும், தமது பிரிவுக்குரிய அனைத்துக் குறள்களையும் மனனஞ்செய்து, ஒப்புவித்தல் வேண்டும்.

போட்டியாளர்கள் குறளின் பொருளறிந்து மனனம் செய்வது போட்டிக்கான திறனை மேம்படுத்தும்.

## போட்டிக்கான புள்ளிகள்

1. மனனம்
2. ஒலிப்பு
3. பலுக்கல்
4. உணர்வு
5. நிலை

என்பனவற்றின் அடிப்படையில் வழங்கப்படும்.

**எல்லாப்பிரிவுகளிலும் அதிகாரம் கூறப்பட வேண்டும்.**

பள்ளியின் அனைத்து மாணவர்களும் திருக்குறள் திறன் போட்டியில் பங்கு கொள்வது அவர்களின் தமிழ் மொழித் திறனை மேம்படுத்தும். பள்ளி மட்டத்தில் பங்கு கொள்ளும் மாணவர்களை ஊக்குவிப்பது அந்தந்த பள்ளியின் கடமையாகும்.



# திணைக்கள மட்டப் போட்டி நெறிமுறைகள்

## மழலையர் பிரிவு

திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும் இரண்டு குறள்களைக் கூற வேண்டும்.

---

## சிறுவர் பிரிவு

முதற்சொல் எழுதப்பட்டிருக்கும் திருவுளச்சீட்டின் மூலம் இரண்டு குறள்களுடன் மேலதிகமாக ஐந்தாவது குறளையும் அதன் பொருளையும் கூறவேண்டும்.

---

## கீழ்ப்பிரிவு – நடுவண் பிரிவுகள் – மேற்பிரிவுகள் – உயர் பிரிவுகள் – மீயுயர் பிரிவு

- திருவுளச் சீட்டின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் **இடைச்சொற்களைக் கொண்டு** குறள்கள் கேட்கப்படும்.
- எல்லாப் பிரிவிலும் அதிகாரம் கூறப்படல் வேண்டும்.

## குறள் ஒப்புவிப்பின்போது

1. **மனனம்**
2. **ஒலிப்பு**
3. **பலுக்கல்**
4. **உணர்வு**
5. **நிலை**

என்பனவற்றின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

திணைக்களமட்டப் போட்டியின்போது பார்வையாளர்கள் உள்நுழைய இசைவளிக்கப்படமாட்டார்கள்.



# இறுதிப் போட்டி நெறிமுறைகள்

## மழலையர் பிரிவு

- திருவுளச்சீட்டு மூலம்  தெரிவு செய்யப்படும் **இரண்டு குறள்களைக்** கூற வேண்டும்.

---

## சிறுவர் பிரிவு

- திருவுளச்சீட்டு மூலம்  தெரிவு செய்யப்படும் **இரண்டு குறள்களுடன் மேலதிகமாக ஐந்தாவது குறளையும் அதன் பொருளையும்** கூறவேண்டும். (திருவுளச்சீட்டில் குறளின் முதற் சொல் மட்டும் எழுதப்பட்டிருக்கும்)

---

## கீழ்ப்பிரிவு – நடுவண் பிரிவுகள் – மேற்பிரிவுகள் – உயர் பிரிவு – மீயுயர் பிரிவு

- திருவுளச் சீட்டின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் **இடைச்சொல்லைக் கொடுத்துக்** குறள்கள் கேட்கப்படும்.
- **மேற்பிரிவிலிருந்து** ...

1. அதிகாரத்தைக் குறிப்பிட்டு **அதிகார எண்** கேட்கப்படும்.
2. குறிப்பிட்ட குறளுக்குரிய **அதிகாரத்தைக் கூறுமாறு** கேட்கப்படும்.
3. குறள்களின் **பொருள்களுக்குரிய** விளக்கம் தொடர்பான **வினாக்கள்** வினவப்படும்.

---

**அனைத்துப் பிரிவுகளிலும்**

1. **மனனம்**
2. **ஒலிப்பு**
3. **பலுக்கல்**
4. **உணர்வு**
5. **நிலை**

**என்பன  கவனிக்கப்படும்.**



# திருக்குறள் திறன் போட்டி – 2026

## மீநடுவண் பிரிவு

அகவை எல்லை 01.09.2012 - 31.08.2014

### 1. அதிகாரம் 42 : கேள்வி

கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி

பொருள் : கேள்வியறிவால் துளைக்கப்படாத செவிகள் ஓசைகளைக் கேட்குமாயினும் செவிட்டுத் தன்மை உடையனவே.

### 2. அதிகாரம் 43 : அறிவுடைமை

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்

பொருள் : அச்சப்பட வேண்டியதற்குப் அச்சப்படாமல் இருப்பது அறியாமையாகும், அச்சப்பட வேண்டியதற்குப் அச்சப்படுவது அறிவாளிகளின் செயல்.

### 3.அதிகாரம் 24 : புகழ்

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று

பொருள் : தோன்றின் ஒரு துறையில் சிறப்போடு தோன்ற வேண்டும். அத்தகைய சிறப்பு இல்லாதவர் தோன்றுவதைவிட தோன்றாமல் இருப்பதே நல்லது.

### 4. அதிகாரம் 14 : ஒழுக்கமுடைமை

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்

பொருள் : நல்ல ஒழுக்கமானது இன்பமான நல்வாழ்வுக்கு வித்தாக இருக்கும.;; தீய ஒழுக்கமோ எக்காலத்தும் துன்பத்தையே தரும்.

### 5. அதிகாரம் 12 : நடுவு நிலைமை

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கு அணி

பொருள் : அழிதலும் ஆக்கமும் உலகில் இல்லாதன அல்ல. ஆகையால் நெஞ்சில் நடுவுநிலைமை தவறாமல் இருத்தலே சான்றோர்க்கு அழகாகும்.

### 6. அதிகாரம் 97 : மானம்

இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்
குன்ற வருப விடல்

பொருள் : கட்டாயமாகச் செய்ய வேண்டிய செயல்கள் என்றாலும்கூட அவற்றால் தனது குடிப் பெருமை குறையுமானால் அந்தச் செயல்களைத் தவிர்க்க வேண்டும்.

திருக்குறள் திறன் போட்டி 2026

வள்ளுவர் ஆண்டு - 2057



நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்